**ஒருவருக்கொருவர் புத்தி சொல்லுங்கள்**

**வாசிக்க**: **ரோமர்** 15:14, 1**தெசலோனிக்கேயர்** 5:14, **எபேசியர்** 5:19.

புத்தி சொல்லுதல் என்பது அவசியமான உண்மைகளையும் சரி செய்யப்பட வேண்டிய காரியங்களையும் பக்குவமாக எடுத்துக் கூறி, அந்த நபரை சரி செய்ய வேண்டும் என்ற நோக்கத்தில் சரியான பாதையில் வழி நடத்துவதாகும்.

பொதுவாக மற்றவர்கள் சொல்லும் புத்திமதிகளையும் ஆலோசனைகளையும் எவரும் விரும்புவதில்லை. ஆனால் நம்முடைய தேவன் ஆலோசனைக் கர்த்தராயிருந்து நமக்கு நல்ல புத்திமதிகளை வழங்கி வழிநடத்துகிறவராய் இருக்கிறார். சங்கீதம் 32:8

மேலும் அவர் தமது வார்த்தையாகிய வேதாகமத்தை உபதேசத்திற்கும் புத்தி சொல்லுதலுக்கும் பயன்படும்படி கொடுத்திருக்கிறார். 2தீமோத்தேயு 3:16,17. தமது ஊழியர்கள் சபைக்கு வேத வசனத்தின்படி புத்தி சொல்லும்படியாகவும் கட்டளையிட்டிருக்கிறார். 2தீமோத்தேயு 4:2.

அதோடுமாத்திரமல்ல, அவரது மக்களாகிய நாமும் ஒருவருக்கொருவர் கற்றுக் கொடுக்கிறவர்களாகவும் ஒருவரையொருவர் சரி செய்கிறவர்களாகவும் ஒருவருக்கொருவர் ஆலோசனைகளையும் புத்திமதிகளையும் சொல்லி பக்தி விருத்திக்கு நேராக வழிநடத்துகிறவர்களாகவும் இருக்க வேண்டும் என விரும்புகிறார். ஆகவே, புத்தி சொல்லுதலும் நம்மிடையே ஞானமாகவும் கவனமாகவும் வயதிற்கும் சூழ்நிலைக்கும் ஏற்ப பின்பற்றப்பட வேண்டிய ஒன்றாகும்.

தேவனோடுள்ள நமது உறவு சரியாக இருக்குமானால் நமது ஒருவரோடொருவர் உள்ள உறவும் சரியாக இருக்கும். நம்மிடையே உறவுகள் சரியாக இருந்தால் பிறரோடுள்ள நமது உறவுகளும் சரியாக இருக்கும்.

எண்ணங்கள் வளப்பட்டால் வார்த்தைகள் வளப்படும்!

வார்த்தைகள் வளப்பட்டால் செயல்கள் வளப்படும்!

செயல்கள் வளப்பட்டால் குணங்கள் வளப்படும்!

பழக்கவழக்கங்கள் வளப்பட்டால் குணங்கள் வளப்படும்!

குணங்கள் வளப்பட்டால் உறவுகள் உறுதிப்படும்!

உறவுகள் உறுதிப்பட்டால் வாழ்க்கை பலப்படும்!

**கேள்விகள்**:

1. நமது ஆலோசனை கர்த்தர் யார்?

2. உபதேசத்திற்கும் புத்தி சொல்லுதலுக்கும் பயன்படும்படி தேவன் எதை கொடுத்திருக்கிறார்?

3. எது உறுதிப்பட்டால் வாழ்க்கை பலப்படும்?